ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

अर्थमनर्थं भावय नित्यं नास्ति तत स्सुखलेशस्सत्यम् ।
पुत्रादपि धनभाजां भीति स्सर्वत्रैषा विहिता रीतिः ॥२॥

**अर्थं**—பொருளை
**अनर्थं**—துன்பத்தை விளைவிப்பதாகவே
**भावय**—இடைவிடாது நினைக்கக்கடவாய்;
**ततः**—அப்பொருளினின்றும்
**सुखलेशः**—அற்பசுகமும்
**नास्ति**—இல்லை;
**सत्यं**—இஃது உண்மையே.
**धनभाजां**—பணம்படைத்தவர்களுக்கு
**पुत्रादपि**—புத்திரனிடமிருந்தே
**भीतिः**—பயமுண்டாகின்றது.
**सर्वत्र**—பத்தினி, பசு, க்ஷேத்திரம் முதலியவஸ்துக்களிலெல்லாம்
**एषा**—இந்த
**रीतिः**—சம்பிரதாயந்தான்
**विहिता**—ஏற்பட்டுள்ளது.

பணம்துன்பத்தையே விளைவிக்குமென்பதை இந்த சுலோகத்தில் திடப்படுத்துகிறார்.— "ஸுகத்திற்காகப் பணத்தைத் தேடுகின்றவர்களே, பணத்தைச் சுகஹேதுவென்று நினைக்காதீர்கள். துன்பத்தை விளைவிப்பதாகவே நினையுங்கள். இடைவிடாமல் ஆலோசித்துப்பார்த்தால் பணத்திலுள்ள இத்தோஷம் தானாகவே புலப்படும். பணம் பெற்றவர்களுக்குப் புத்திரனிடமிருந்தே பயமுண்டாகின்றதென்பது யாவருக்கும் பிரத்தியக்ஷம். இப்படியானால் அரசன், திருடன், ஞாதி, முதலியவர்களிடமிருந்து பயமுண்டாகுமென்பதில் கேட்கவேண்டுமா? இதுபோலவே பத்தினி, பசு, முதலிய மற்ற விஷயங்களிலும் இதே ரீதிதான் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால், ஸாமான்யமாய் ஸகல விஷயங்களும் துக்கஹேதுக்களாகின்றமையால் அவைகளில் இத்தோஷத்தைப் பாவித்து, அவைகளை விலக்க முயலவேண்டும்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய-௵ வைகாசி-மீ ௨அ-௳

## ஆ. கா. மா. வை. புண்ணியகாலம்

பஞ்சாங்கங்களில் ஆனிமீ அமாவாசைக்குப் பிறகுவருகின்ற ஆஷாட பூர்ணிமா தினத்திலும், ஐப்பிசிமீ அமாவாசைக்குப் பிறகு வருகின்ற கார்த்திகை பூர்ணிமா தினத்திலும், தைமீ அமைக்குப் பிந்திவருகின்ற மாகபூர்ணிமா தினத்திலும், சித்திரை மாதம் அமைக்குப் பிந்திய வைசாக பூர்ணிமா தினத்திலும், "ஆகாமாவை" என்று போட்டு வருகின்றனர். அதனால் கீழ்க் காட்டிய நான்கு தினங்களும் ஏதோ ஒரு விசேஷமுள்ள தினங் களென்று ஸாமான்யமாய்த் தெரிகின்றது. அந்த விசேஷமென்ன வென்று ஆராய்ச்சி செய்யின் இப்பொழுது நடந்துவரும் சிஷ் டாசாரத்தினல் அந்நாட்களில் ஸ்னை தானுதிகள் செய்வது மிகுந்தபுண்ணியமாகுமென்பது தெரியவருகின்றது. அந்தநான்கு தினங்களிலும் சிஷ்டபரம்பரையை யனுஸரித்துவரும் ஆஸ்தி கர்கள் ஸ்திரீ பாலகருள்பட சூரியோதயத்திற்கு முந்தியே மேற் றிசையில் சந்திரபிம்பம் தெரியும்படியான ஸமயத்தில் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னைம் செய்து வருகின்றார்கள். அங்ஙனம் ஸ்னை னம் செய்யாவிடில் ப்ரம்மராக்ஷஸ்ஸாகப் பிறப்பார்கள் என்றும் கதையையும் சொல்லிக் கொள்ளுகின்றார்கள். இதற்கெல்லாம் பிரமாணங்களை ஆராய்ச்சி செய்யின் இவைகளில் தத்துவம் வெளிப்படும். அதை நன்கறிந்த பெரியோர்களுமிருப்பார்கள். நமது ஸனைதன தர்மங்களுக்குரிய பிரமாணக் கிரந்தங்களின் ஆராய்ச்சி குறைந்த இக்காலத்தில் அதையறிவதும், அறிந்தவர் களைக் காண்பதும், சிரத்தை குறைந்தவர்களுக்கு துர்லபமாயிருக் கின்றது. ஆயினும், எமது சிற்றறிவிற்கெட்டியவரை சிறிது இங்கு வெளியிடுவாம்.

वैशाखी कार्तिकी माघी तिथयोऽतीव पूजिताः ।
स्नानदानविहीनास्ता न नेयाः पाण्डुनन्दन ॥

வைசாகபூர்ணிமை, கார்த்திக பூர்ணிமை, மாகபூர்ணிமை, இந்த பூர்ணிமாதிதிகள் சிறந்த புண்ணியகாலமெனப் புகழப் பட்டவைகள். ஓ பாண்டு குமாரா! அவைகளை ஸ்னானதா னாதி நற்கிரியையில்லாமல்க் கழித்து விடலாகாது.

என்று நிர்ணயஸிந்து முதலிய நிபந்தனக்கிரந்தங்களில் பவிஷ்யத் புராணாதி வசனமூலமாக அந்தப்பூர்ணிமைகளின் மஹிமை கூறப் படுகின்றது. அவற்றுள் (1) ஆஷாடபூர்ணிமை, அக்னிஸாவர்ணி கமன்னு வாதியாகையால் சிறந்தபுண்ணியகாலமாகும். அன்றியும் அந்தந்த வருஷங்களில் பின்வரும் பயிர்களின் விருத்திக்கும், தான்யாபிவிருத்திக்கும், அவைகளின்மத்தியநிலைமைக்கும், அவை ஹாநிக்குமுள்ள லக்ஷணத்தை ஸூசிப்பிக்கிற மஹாபுண்ணியகா லமென்று பிருஹத்ஸம்ஹிதை முதலிய ஸம்ஹிதாக்கிரந்தங்களில் கூறப்படுகின்றது.

आषाढ्यां समतुलिताधिवासितानामन्येद्युर्यदधिकतामुपैति बीजम् ।
तद्वृद्धिर्भवति न जायते यदूनं मन्त्रोऽस्मिन् भवति तुलाभिमन्त्रणाय ॥

ஆஷாட பூர்ணிமாதினத்தன்று எந்த தான்யாதிகளின் பீஜ ங்க (விதைக)ள் ஸமமாயிருக்கும்படி அளவிடப்பட்டும், மஹாவிரத மந்திரங்களால் அபிமந்திரணம் செய்யப்பட்டும் ஒருநாள் இரவு வைக்கப்பட்டு மருதினத்தில் அளவிடும்பொ ழுது முதல் நாளளவை விட அதிகப்படுகின்றனவோ, அவை கள் பலகாலத்தில் அதிகமாய் விளையும். குறைந்தால் குறை யும்.முன்னளவிள்ளதாகவேஇருந்தால் மத்தியமமாயிருக்கும். அளவிடும்பொழுது அபிமந்திரணத்திற்காக ஒரு மந்திரம் இருக்கின்றது, என்று பிருஹத்ஸம்ஹிதையிலும், ஸமாஸ ஸம்ஹிதையிலும், கூறப்படுகின்றது.

இவ்வாறு அந்தந்த வருஷங்களின் பின்வரும் பயனை ஸூசிப்பிக் கும் புண்ணியகாலமென்று ஆஷாடீயோகமெனப்படும். பிருஹத் ஸம்ஹிதையின் 26-வது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருன்றது.

(2) கார்த்திகை பூர்ணிமைதக்ஷஸாவர்ணமன்னுவாதியாம். அன்றியும் 'कार्तिकोल्का केलिमुखा:' என்பதாதி மூதறிஞர் கூறிய வண்ணம் அனேக ரோக நிவர்த்திக்காகவும், ஆரோக்கிய ஸித்

திக்காதவும், உல்க்காகேளி (பந்தம் கொளுத்தியாடல்) முதலிய காரியங்கள் அன்று விதிக்கப்படுகின்றன. இது வைத்தியக நூல்களில் ஸூசிக்கப்படுகின்றது. இங்கு விரிவிற்கஞ்சி விடுத்தோம்.

(3) மாகபூர்ணிமை யுகாதியாகும். அதனால் அது விசேஷ புண்ணியகாலமாம்.

(4) வைசாக பூர்ணிமை, வைசாக மாஸ ஸம்பந்தத்தாலும் வைசாக ஸ்நானபூர்த்தி தினமானதாலும் ருதுஸந்தியானதாலும் சிறந்த புண்ணியகாலமாம். இவைகளின் மற்றுமுள்ள அநேக விசேஷங்கள் அந்தந்த மாஸத்திய மாஹாத்மியங்களைக் கூறும் புராணங்களைப் பார்த்தால் புலப்படும். ஆங்கே கண்டுதெளிக இந்நான்கு பூர்ணிமைகளையும் ஸங்கேதமாய் "ஆகாமாவை" என்று புராணங்களில் கூறுவதுண்டு. இம்மாதிரி ஸங்கேத சப்தங்கள் நமது ஸ்மிருதிகளிலும் வழங்கப்படுகின்றன.

आभाकासितपक्षेषु मैत्रश्रवणरेवती ।
द्वादश्यां संस्पृशेयुश्चेत् तत्रानध्ययनं विदुः ॥

என்று வைத்திநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரம காண்டம் அனத்தியயனப் பிரகரணத்தில் ஸத்தியதபஸ் என்பவரின் வசனமாகக்கூறப்பட்ட சுலோகத்தில் **ஆ பா கா** என்ற பதங்கள் முறையே ஆஷாடம், பாத்திரபதம், கார்த்திகம், என்ற மாதங்களைக் குறிக்கும் ஸங்கேத சப்தங்களாக உதாகரிக்கப் பட்டிருக்கின்றது. இது போலவே "ஆகாமாவை" என்பதுமாகலாம். ஆகையால் அந்த பூர்ணிமைகளில் ஸ்நான தானாதி சுபகார்யங்களைச் செய்துஎல்லோரும் சிரேயஸ்ஸை யடைவார்களாக.

பத்திராதிபர்.

## கும்பகோணம் அத்வைத சபா.

1. இப்பவும் கும்பகோணம் அத்வைதஸபா வித்வான்களின் 32-வது வருஷாந்திர ஸமாஜமானது ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்யஸ்வாமிகளவர்களின் பரிபூரண அனுக்கிரகத்தைமுன்னிட்டு, கும்பகோணம் ஸ்ரீமடத்தில் 1926வ ஜூலைமீ 29உக்குச் சரியான அக்ஷய வருஷம் ஆடிமீ 14உ வியாழக்கிழமை காலையில் $8\frac{1}{2}$ மணிக்கு மேல் துவக்கம்செய்து வழக்கம்போல் ஒருவாரம் நடத்துவதாக

கமிடியில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. தாங்கள் ஷை ஸபை ஆரம்பஸமயத்திற்கே விஜயம் செய்து ஷை ஸபையை கௌரவமாய் நடத்திக்கொடுக்க வேண்டுமாகப்பிரார்த்திக்கிறேன்.

## பிரைஸ் பரீக்ஷைகளின் விபரம்.

2. நாளது ஸபையில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் மத்வமதவித்வம்ஸனம் என்கிற கிரந்தத்தில் முழுவதும் பரீக்ஷையில் தேறிய 3 வித்வான்களுக்கு அநுக்ரகபுரஸ்ஸரம் முறையே ரூ. 25, 15, 10. ஸன்மானம் செய்வார்கள்.

3. மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ M. V. ஸுப்பிரமணிய அய்யரவர்கள் தன் தகப்பனார் லேட் P. வெங்கடேச்வர அய்யரவர்கள் ஏற்படுத்திய 10 உபநிஷத்பாஷ்ய பிரைஸ **1**. ஈசாதிஐதரேயம் வரையில், **2**, சாந்தோக்யம், **3**. பிருகதாரண்யம் இம்மூன்று கிளாஸ்படி பாஷ்யங்களில் பரீக்ஷையில் தேறிய 3 வித்வான்களுக்கு முறையே ரூ. 7, 8, 10 ஸன்மானம் செய்வார்கள்.

4. கும்பகோணம் பென்ஷன் காலேஜ் லச்சரர் மகா-ா-ஸ்ரீ K. ஸுந்தரராம அய்யர் அவர்கள் M.A., அவர்களால் மதாபிவிருத்தியை நோக்கி அத்வைத ஸபையில் ஏற்படுத்தப்பட்ட மூலதனத்தின் நாளது ஷெலுத்திய அபிவிருத்தி ரூ. 24 தனியாக ஷை யார் ஸப்ஸ்கிருப்ஷன் ரூ. 11 ம் ஆ. ரூ. 35யும், 11—7—26 அத்வைத ஸபைக்கு விஜயம் செய்யும் வித்வான்களில ஷை ஸபா பரீக்ஷாதிகாரிகளால் நியமிக்கப்பட்ட ஒரு வித்வான் ஷை ஸபையோர்களால் குறிப்பிடப்பட்ட இடத்தில் ஹிந்துமத விஷயமாக இரண்டுவாரம் உபன்யஸிக்க வேண்டும். ஷை வித்வானுக்கு ஷை ரூ 35 ம் அச்சமயம் ஸன்மானம் செய்யப்படும்.

5. திருத்துறைப்பூண்டி ஸப் ரிஜிஸ்தார் மகா--ா-ஸ்ரீ R. கிருஷ்ணஸாமி சாஸ்திரியள் அவர்கள் B.A., ஸ்ரீராமாநுஜாசாரியார் அவர்களால் ஸ்ரீபாஷ்ய கிரந்தத்தில் மாயையை நிரூபிக்கும் மஹாபூர்வபக்ஷத்தில், அத்வைத மதத்தில் (7) எழுவித அனுபபத்திகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஷை அனுபபத்திகளுக்கு அத்வைத மத ஸித்தாந்தப்படி ஸமஸ்கிருத பாஷையில் வியாஸரூபமாக ஸமாதனம் தெளிவாய் எழுதி ஷை ஸபாவின்

ஆரம்ப ஸமயத்திற்கு 2 வாரம் முன்னமேயே ஸபா காரியதரிசி அவர்களுக்கு அனுப்புகிற வித்வான்களில் தேறிய ஒரு வித்வானுக்கு ரூ 35 ஸன்மானம் செய்வார்கள்.

6. மகா-ா-ாஸ்ரீ ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரியள் அவர்கள் சிவார்க்கமணிதீபிகை என்கிற கிரந்தத்தில் ஆனந்தமயாதிகரணம் முடிய பரீக்ஷையில் தேறிய ஒரு வித்வானுக்கு ரூ 18ம். பிரபோதசந்திரோதயம் என்கிற நாடகத்தில் பரீக்ஷையில் தேறிய ஒரு வித்வானுக்கு ரூ 10 ம் ஸன்மானம் செய்வார்கள்.

7. மேல்கண்ட பரீக்ஷைகளில் வாசகம் 8 லேகனம், 8 கேழ்விகள் கேட்கப்படும்.

8. மார்க்கு 100-க்கு 75, 50, 40 வாங்குகிறவர்கள் கிளாஸ் வித்யாஸப்படி பரீக்ஷையில் தேறியவர்களாவார்கள்.

9. ஸபைக்கு விஜயம் செய்யும் எல்லாவித்வான்களும் தாங்கள் பரீக்ஷைக்கொடுக்கும் கிரந்தங்களுடன்வரவேண்டும்.

10. ஸபைக்கு விஜயம் செய்யும் எல்லா வித்வான்களும் முதல் நாளே விஜயம் செய்யவேண்டும்.

11. விஜயம்செய்யும் எல்லா வித்வான்களுக்கும் போஜனாதி ஸௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம்,
தங்கள் விதேயன்,
ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரியள்,
காரியதரிசி.

॥ श्रीशङ्करगुरुभ्यो नमः ॥

## ॥ कुम्भघोणस्थाद्वैतसभापरीक्षाकक्ष्याविभागः ॥

एकैकस्यापि कक्ष्यायां प्रथम द्वितीय तृतीय भावेन त्रैविध्यं स्यात् ॥

तत्र अङ्कशतस्य पञ्चसप्ततेरुपरि अङ्कप्राप्तौ प्राथम्यं, पञ्चाशदुपरि अङ्कप्राप्तौ द्वितीयत्वं, पञ्चत्रिंशदुपरि अङ्कप्राप्तौ तृतीयत्वं, तत्तत्कक्ष्याग्रंथेषु प्रतिग्रन्थं लेखनपरीक्षा वाचिकपरीक्षा च भवेत्। प्रत्येकश्चत्वारः प्रश्नाश्च ॥

## प्रथमकक्ष्या ।

| | |
|---|---|
| रामकृष्णदीक्षितीयसहितपरिभाषा | ७—६—५ |
| सिद्धान्तलेशसंग्रहयोरन्यतरस्य मिळितयोः | १०—८—६ |
| श्रीशङ्कराचार्यप्रणीतशतश्लोकी प्रकरणम् | |
| कण्ठस्थमेव सम्भाव्येत | ७—५—४ |

## द्वितीयकक्ष्या ।

सूत्रभाष्यम् ।

गीताभाष्यसहितमीशाद्युपनिषदष्टकभाष्यम् ।

छान्दोग्यबृहदारण्यकभाष्ये

एतेषु प्रत्येकं द्वयोः त्रिषु वा परीक्षा भवेत् ।

| | | |
|---|---|---|
| प्रत्येकभागस्य | | १०—८—६ |
| प्रकरण | विशिष्टस्य... | ११—१०—८ |
| | विशिष्टयोः... | १४—१२—१० |
| | विशिष्टानां... | १६—१४—१२ |

इत ऊर्ध्वं पूर्वपूर्व कक्ष्यासूत्तीर्णानामेव प्रवेशः ।

## तृतीयकक्ष्या ।

(१) वाचस्पत्ये प्रथमद्वितीयाध्यायौ ।

(२) न्यायरक्षामणिः ।

(३) ब्रह्मविद्याभरणे प्रथमाध्यायः ।

एषामन्यतमो ग्रन्थः । १८—१६—१४

## तुरीयकक्ष्या ।

अद्वैतसिद्धिः आगमबाधोद्धारान्तं ब्रह्मानन्दीयं च २२—२०—२४

## पञ्चमकक्ष्या ।

पूर्वोक्ताध्याययोः कल्पतरुपरिमळौ शास्त्रदर्पणश्च २५—२३—२१

कार्यदर्शी,

राव्बहदूर्. एस्. अप्पुशास्त्री.

## கும்பகோணம் அத்வைத ஸபாவின் பரீக்ஷை விதிகள்.

1. பிரைஸ்பரீக்ஷைக்கு வருகிற வித்வான்கள் பிரஸ்தானத்திரயம் பரீக்ஷை கொடுத்தவர்களாக இருக்கவேண்டும்.

2 சிகாமணி வியாக்கியானத்துடன் வேதாந்த பரிபாஷை அல்லது ஸித்தாந்தலேசஸங்கிரகம் பரீக்ஷை கொடுத்துத்தான் பிரஸ்தானத்திரய பரீக்ஷைக்கு வரவேண்டும்.

3 வேதாந்த பரிபாஷை அல்லது விவேகசூடாமணி பரீக்ஷை கொடுத்துத்தான் பிரபோதசந்திரோதயம் பிரைஸ் பரீக்ஷைக்கு வரவேண்டும்.

4. பிரைஸ் பரீக்ஷைக்கும் புதிய பரீக்ஷைக்கும் வருகிற வித்வான்கள் தான் படித்த குருவினிடம் வாசித்த கிரந்தங்களையும் யோக்கியதையையும் பற்றி விபரமாக ஸர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வரவேண்டும்.

5. பிரைஸ் பரீக்ஷைக்கும் புதிய பரீக்ஷைக்கும் வருகிற வித்வான்கள் இதில் கண்ட விஷயங்களில் எந்த விஷயத்தில் பரீக்ஷைக்கு வருகிறதற்கு விருப்பமிருக்கிறதோ அதை பூரா விபரத்துடன் எழுதி ஷை ஸபா காரியதரிசி அவர்களுக்கு ஸபை ஆரம்பிக்க ஒரு மாத முன்னமேயே தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

## சிரௌதகர்ம.

நமது ஸநாதந தர்மத்திற்குச் சத்ருக்கள் பலர். இவர்களை பாஹ்ய சத்ரு ஆந்தரசத்ரு என இரு கூறாகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றிலும் பல பிரிவுகளுள. இதை விவரிப்பதில் பயனில்லை. நமது தேசத்தில் நமது ஆரியதர்மத்தில் பிராமணகுலத்திலுதித்து வேதகாவ்யங்களைக் கற்றுணர்ந்து வேதவிருத்தமான மதங்களை வெளியிடுவோரை ஆந்தரசத்ரு என்றுதான் சொல்லவேண்டும். வேதாந்தம் பேசிக் கர்மாவை இகழ்வோர் ஓர் புறமிருக்க யக்ஞ கர்மாவைத் தூஷித்துப் புத்தகமெழுதுவோர துபுத்தியை என்னென்று சொல்லுவது **"विद्या विवादाय धनं मदाय"** என்றபடி கல்வியைத் துர்மார்க்கத்திலுபயோகப் படுத்துவது மிகப் பாபகாமான செயல். தென்னாட்டிலிருந்த ஓர் சதுச்சாஸ்திர பண்டிதர் பெய

ரைத் தனக்கநுகூலமாகக் கொண்டு மார்தட்டி ச்ரௌத கர்மாவை செய்யலாகாதெனப் போருக்கழைக்கின்றனர் சில போலி பண்டிதர்கள். பொதுவாக இவ்வஞ்சக ஜீவகாருண்யம்பலருள்ளத்தைப் பரிக்கும். அதிலும் லௌகிகரெனப்படுவோர் "ஐயோ யாகமா ?" என்று அலருகின்றனர். சுருதிஸ்மிருதிகள் ஈசனது ஆணைகளாம். அவை நமது நன்மார்க்கத்தையே கோருகின்றன. தாய் பிள்ளையைக் கெடுப்பாளா ? அவ்வேதமாதாவின் உடலில் முக்கால் பாகமும் யக்ஞத்திலேயே உபயோகமாகின்றது. க்ஞாநகாண்ட பாகம் சிறிதெனலாம். ஹோத்ருகாண்டம் அத்வர்யுகாண்டம் உத்காத்ருகாண்டம் என முறையே ருக்யஜுஸ்ஸாமவேதங்களுக்கு வைதிக பரிபாஷையுளது. அநுபவபூர்வமாக வேதத்தை நம் முன்னோர் ரக்ஷித்து வந்தனர். கேவலபாடமாகவே இப்போது வேதம் ரக்ஷிக்கப்படுகிறது. வேதங்களில ஓர் அக்ஷரங்கூடக் குறைக்கவோ சேர்க்கவோ முடியாதபடி வர்ணக்கிரமலக்ஷணங்கள் ஸ்வரம் பதக்கிரமாதிகள் ஏற்பட்டனபோல் என்றென்றைக்கும் வேதமழியாதபடி பரிபாலிக்கவும் யக்ஞமோர் ஸாதநமாகிறது. நமது பாரத கலைகளில் பல அழிந்தன, சில சிலரால் பரிக்கப் பட்டன. எஞ்சியுள்ளவை அநுபவவழியில் ஆசரிக்கப் படாவிடின் எங்ஙனம் காப்பாற்றப்பட்டதாகும். யாகசாலை, வேதி, யக்ஞபாத்திரங்கள், சயநேஷ்டகைகள் இவைகளின் அளவு, நிர்மாணம் முதலியவைகளைத் தற்கால இஞ்சினீரிங் வேலைகளுடன் ஒப்பிடலாம். நமது நாட்டுக் கலைகளைக் காக்கவேணும். யக்ஞத்தை ஆதரித்தல் வேண்டும். இதனால் பரலோகத்தையும், ஸம்ஸ்காரத்தையும், வேதமஹிமையையும் மறந்ததாகாது.

கேவல ஜீவகாருண்யத்தாலோ வேதாந்தப் பேச்சாலோ யாகத்தை மறுப்போர் **त्रिभिर्ऋणवाजायते** என்ற சுருதிக்கும்

**ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ।**

என்ற (முக்கடனுடன்-வேதாப்யாசத்தால நீக்கத்தக்க ருஷிக்கடன் யாகத்தால் நீக்கவல்ல தேவக்கடன், ஸத்புத்ரனால் நீக்கக்கூடிய பித்ருக்கடன், இவைகளை நீக்கியே மோக்ஷத்தில் மநதைச் செலுத்த வேண்டும்.) ஸ்மிருதிவிதிக்கும் என்ன பதில் கூறுவார் ? எப்புண்ணிய கார்யத்திலும் எந்த உத்தமயோகியின் செயலிலும் பாபம் கலவாதிராது. அதற்காகவே பல பிராயச்சித்தங்கள்

சொல்லியிருக்கின்றனர். ஜீவஹிம்சையில்லாது ஜீவித்திருக்க எவராலும் முடியாதெனக் கூறலாம். பரிஹரிக்கமுடியாதவை பல. நமது முன்னோர்கள் செடி கொடி கல் முதலிய எங்கும் ஜீவனைக் கண்டனர் "तस्मात् पश्यन्ति तरवः" என்ற பாரத வாக்கியத்தை ப்ரமாணமாகக் கொண்டு வங்க வீரன் ஜகதீச சந்திரவஸு என்பார், செடி கொடிகளின் ஹர்ஷவிஷாதங்களை மெய்ப்பிக்கப் பல கருவிகளைக் கண்டார். ஒரு தினத்தில் ஜீவகாருண்யம் பேசுவோருள்பட பாரதர் எத்தனை (காய் கரிவகையில் மட்டில்) ஜீவராசிகளை வதைக்கின்றனர். ஜலமருந்தும்போதும், நடக்கும்போதும் கணக்கில்லாப் பிராணிகளைக் கொல்கின்றனர். வாயைவிட்டுக் கத்தாததால் அவைகளை ஜீவனல்லவென்று விவேகி கூறுவானா?

खण्डिनी पेषिणी चुल्ली उदकुम्भी च मार्जिनी ।
यञ्चसूना कृतं पापं पञ्चयज्ञेन नश्यति ॥

காய்களை அறுத்தல், பொடி பண்ணுதல், அடுப்பு எரித்தல். ஜலமெடுத்தல், பெருக்குதல், இவ்வைந்து கசாப்புக்கடைகளில் தினந்தோறும் கொல்லும் ஜீவனுக்கு என்ன பரிஹாரம் தேடினோம். அப்பாபத்தைத்துலைக்கவே பஞ்சமஹாயக்ஞம் விதிக்கப்பட்டது. ஜீவகாருண்யம்பேசுவோரில் எத்துணைபேர். இக்கொலையிலிருந்து தங்களை மீட்டுக்கொண்டனர். வீணாகப் பேசி மதாபிமானிகளின் மனதைப்புண்படுத்தாமல் யக்ஞநிந்தையால் நேரும் பாபத்திற்காளாகாமல் சுருதி ஸ்மிருதிகளைத் திருத்திக் கூறாமல் பரலோகத்தைக் கருதி யக்ஞத்தை ஆதரிக்கும்படி பண்டிதர்களையும், லௌகிகர்களையும் வேண்டுகிறேன்.

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.

---

# ஹிந்துமத அனுஷ்டானம்..

இத்தலையங்கமிட்டு 15—4=26 வியாழக்கிழமை சுதேசமித்திரனில் ஓர் விஷயம் வரையப்பட்டிருக்கிறது. அது ஓர் ஸனாதனி ஹிந்து காந்தியவர்களைக் கேட்டிருந்த விஷயத்திற்கு ஸமாதானமாய் நவஜீவன் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டிருப்பதாய் மித்திரன் எழுதுகிறார். அவ்விஷயத்தைக் கண்ணுற்ற எனக்கு

சில எழுத வேண்டுமென்று தோன்றியதை அங்கு அனுப்புவது பயனற்றதாய் ஆகுமென முன் பன்முறை சொல்லியிருப்பதை முன்னிட்டு நம் ஆர்யதர்மத்திலேயே பிரசுரிக்கலானேன்.

ஹிந்துமதமென்றால் ஓர் ஸனாதன மதமென்றும் ஸனாதனம் என்பதற்கு எப்போதும் உள்ளதென்றும், எப்போதுமென்றால், முக்காலமென்பதையும், ஆஸ்திகர் யாவருமுணர்ந்திருப்பார். அத்தகைய மதத்திற்கு ஓர் ரூபம் வேண்டும். ரூபமென்றால் நம்மைப் போல் கைகால் அவயவமுடையதென்றல்ல. அது அவ்வித ரூபமுள்ளதல்ல. மற்று அரூபியாய் ஓர்பிரமாண நூலை ஆதாரமாய்க் கொண்டிருக்கும். இவ்விதமே மற்ற மதங்களும் ஒவ்வோர் பிரமாணமுள்ளது. அத்தை அனுஷ்டிப்போது நடை உடை பாவனைகளும்வேறுபட்டிருக்கும். ஆனால் தத்வம் மட்டிலும் எல்லா மதத்திலும் ஒன்றாய்த்தானிருக்கும். பொதுவாய்க்கூறின் கடவுள் ஒருவருண்டென்றும் பரலோகம் ஒன்றுண்டென்றும் கடவுளின் ஆணைக்குக்கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும், அவரது ஆணைவேதமென்றும் அதை அனுஷ்டித்துக்கடவுளின் அருளைப்பெற்ற பெரியோர் அநேகர் உண்டென்றும் அவர்ககள் எதைக்கூறியிருக்கின்றனரோ அதுவும் நமக்கு கொண்டாடத் தக்கதென்றும் எல்லா மதஸ்தரும் ஒப்புக்கொண்ட விஷயமே. இது இவ்விதமிருக்கட்டும் இனி பிரகிருதத்தை ஆராய்வோம்.

ஸனாதனி ஹிந்து காந்தியவர்களை அடியில் வருமாறு கேட்டிருக்கிறாராம்:— தற்கால ஹிந்து மத அனுஷ்டானங்களைப்பற்றி சில ஐரோப்பிய பாதிரிமார்கள் அல்லது உத்தியோகஸ்தர்களைத் தவிர வேறு யாவரும் ஹிந்துமத தத்துவங்களைப் படித்தறிவதில் சிரத்தைகொள்வதில்லை. பரம வைதீகர்களென்று சொல்லுவோர் சாஸ்திரப்படி நடப்பதில்லையென்றும் தீண்டாதவர்கள் மாமிசம் சாப்பிடுவதை நிறுத்தும்படி தாங்கள் சொல்லக்கூடாதா என்பதே.

ஆரியர்களே முதலில் ஸனாதனி ஹிந்துவின் கேள்வியைக் கவனியுங்கள். ஹிந்துமத அனுஷ்டானங்களை ஐரோப்பிய பாதிரிமார்களும் உத்தியோகஸ்தர்களும் அறிந்திருக்கிறார்களாம். வைதீகர்கள் அறியவில்லையாம். என்ன விபரீதம்! ஸனாதனி ஹிந்து ஹிந்துமத அனுஷ்டானமென்னதென்பதை செவ்வையாய் அறி

ந்து கொள்ளவில்லையென்பதை வெளிக்காட்டுகிறார். பாருங்கள்! பாதிரிமார்கள் அறிந்திருப்பது எம்மட்டிருக்கும். நம்மவர்களை பரிஹஸிப்பதற்கு மட்டிலும் எங்கேயாவது அரைகுறையாய் தெரிந்துகொண்டிருப்பார்களென்பதை ஸனாதனி ஹிந்து கேட்டறிந்து கொள்ளவில்லை யென்பது மிகவும் விசனிக்கத் தக்கது. அதுவும் ஒன்றுமறியாதவர்களிடத்திற் கூறி ஏமாற்றத்தக்கதாய்த் தானிருக்கும். இதை அறியாத பாதிரிமார்கள் அறிந்து விட்டாரென்றும் வைதீகர்களறியவில்லை யென்னும் கூச்சமின்றிக் கூறுகின்றனரே. இதில் இவருக்குஎன்ன ஸந்தேகம்வந்தது. பாதிரிமார்களிடத்தில் உபதேசம் பெற்றுக்கொண்டு அவர்களையே குருவாய்ப்பேணலாமென்ற அபிப்பிராயமா? மற்று தீண்டாதவர்களை மாமிசம் சாப்பிடாமலிருக்கச் செய்யவேண்டு மென்கின்றனரே. மற்றவர்கள் ஒப்பந்தமாய்விட்டதா. இப்படியெல்லாம் ஸனாதனி ஹிந்து கேட்டிருப்பது நமக்கு விளங்கவில்லை.

எந்த மதமும் இயற்கையை அனுஸரித்து வளரவோ க்ஷிணதசையடைவோ ஸகஜம் என்பது மற்றொரு முதல் வாக்கியம். இங்கு மதம் இயற்கையை அனுஸரித்து வளருவதும் க்ஷீணதசை அடைவதும் ஸகஜம் என்று சொல்லியிருக்கலாம். செய்வது என்று போட்டிருப்பதின் அர்த்தம் விளங்கவில்லை. ஒரு சமயம் கடவுளால் செய்யப்படுகிறதென்று அர்த்தம் கொள்ளல் வேண்டுமோ. யாதோ இருக்கட்டும், ஹிந்துமதம் இப்போது எண்ணிறந்த கிளைகளைத்தாங்கிக் கோண்டிருக்கிற ஒரு பெரிய மரத்துக்கு ஒப்பாய் இருக்கிறது. ஒவ்வொரு மாறுதலும் அதைப் பாதிக்கின்றது என்று அடுத்துக் கூறுகின்றனர். இதைக் கவனிக்க வேண்டும். மரமென்றால் எண்ணிறந்த கிளைகளுடையது தான். கிளைகளில்லாவிடின் மரமாகாது. ஓர் போக்குள்ள தென்னை பனைமரம் போல் நமது மதமல்ல வென்பதும் அவர்களது அபிப்பிராயமாயிருக்கலாம். அதுவும் உண்மையே. ஆனால் ஒவ்வொரு மாறுதலும் அதைப் பாதிக்கின்றதென்கிறார், இதுதான் ஸந்தேஹமாய்இருக்கிறது. மரத்தின் கிளைபோல்மாறுதலென்றால் மரத்தின் ஸ்வரூபத்தை விட்டு வேறுவிதமாய் மாறியிருக்கிறதில்லை.

(தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

அங்காரகனது அக்கினி ரூபத்தைப்போக்கியது—'சுரஹரதீர்த்தம்' தேவர்கட்குவந்த மஹேச்வர சுரத்தைப்போக்கியது—'பாண்டவ தீர்த்தம்' பாண்டவதூதப் பெருமாளால் உண்டாக்கப்பட்டது.

## தீர்த்தபலன்.

சிவகங்கையில் சோமவாரத்தில் ஸ்நானம் செய்வோருக்குக் கங்காநதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகுமென்று உமாதேவியாராலும், 'மங்கள தீர்த்தத்தில்' மங்களவாரத்தில் ஸ்நானம் செய்தால்சரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும் என்று அங்காரகனாலும், 'சுரஹரதீர்த்தத்தில்' எந்த வாரத்திலாயினும் ஸ்நானம் செய்தால் கபிலா நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும் என்று தேவர்களாலும், பாண்டவர்களாலும் தீர்த்தத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்நானம் செய்தால் கிருஷ்ணா நதியில் ஸ்நானம் செய்த பலனுண்டாகும் என்று பாண்டவர்களாலும் வரங்கள் கொடுக்கப்பட்டன.

ஆக சிவக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் உள்ளன விநாயகாலயம் 1 ஸ்கந்தாலயம் 1 துர்க்கை ஆலயம் 4 சிவலாயம் 8 விஷ்ணுவாலயம் 3 முத்திரை 5 தீர்த்தம் 4 என்ற இவைகளாம்,

இந்த ருத்திரசாலையில் இவையெல்லாம் ஏகாம்பரநாதருடைய ஆக்ஞையினால் எப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போருக்குக் கைலாசவாச பலனுண்டாகுமாதலால் இது பூலோக கைலாசமெனப்பெயர் பெற்றது.

## மஹிமை.

கிருஷ்ணாதீரத்தில் ஏலாபுரத்தில் ருக்வேதியும் கௌதமகோத்ரக்ஞனுமான கௌசிகன் என்னும் பிராமணன் சத்கர்மஹீனனாய்த் துராசர சம்பன்னனாய்ப் பூமியில் நிக்ஷேபங்களைக் காண்பதற்கு எங்கும் உலாவி மார்க்கங்களில் யாத்திரையாய்ச் செல்லுகின்றலக்ஷணமுள்ள பாலர்களைத்தன்னிடத்திற்கழைத்துப்போய் அவர்களுக்கு வேண்டிய அன்னோதகங்களையும் திரவியங்களையும் கொடுத்துப் பாதுகாத்துவந்து ஆறேழு மாதமாவது ஒரு வருஷமாவது கடந்தபின் நிக்ஷேபம் காணும் இடங்களில்பலிகொடுத்து அத்திரவியங்களை எடுத்துக் கொள்வன். இவ்வாறு செய்துவரும்

நாளில் காஞ்சி க்ஷேத்திரத்திலிருந்து ஓர் அந்தணன் யாத்திரையாக மார்க்கத்தில் வரும்பொழுது அவனது தாகவேட்கையைக் கண்டு மனமிரக்க முடையவனாய் நீர்மோரைக் கொடுத்தனன். சிலநாட் கழிந்தபின்னர் அவன் மரணமடைய அவனை இயமன் பாசத்தாற்கட்டித் தனது உலகத்திற்குக் கொண்டு போயினன். சிவகணங்கள் அவனை மீட்டுக் கைலாசத்திற் சேர்த்தார்கள். இதன் காரணமறியாது இயமன் கைலாசம் சென்று சிவபெருமானை வணங்கி "இக்கொடுமையாளன் இங்கு வருவதற்குக் காரணம் என்னையோ" என்று வினவ, சிவபெருமானார் "ஓ, இயமனே, இவன் மகாபாதகனாயினும் ஒரு சிறு புண்ணியத்தால் பல பெரிய பாவங்களைப் போக்கவல்ல ருத்திரசாலையினின்றும் வந்த ஓர் பிராமணனுக்குத் தாகம் தணிவித்ததனால் இங்கு வரப்பெற்றனன். நீ செல்லக்கடவாய் என்று விடை கொடுத்தனர்.

ஆறுவது அத்தியாயம் சிவக்ஷேத்திர வரலாறு முற்றிற்று

---

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## ஏழாவது அத்தியாயம்.

### விஷயசூசனை.

---

[இது ஏகாம்பரநாதர் இடம் கொண்டிருக்கும் மாமரத்தினுடைய ஸ்வரூபம் இது எனவும், அதுவோர் பிரளயகாலத்தில் மார்க்கண்டேயருக்காக வளர்ந்தது. அவரைக் காத்துக் காஞ்சியில் வாழச் செய்தவிதம் இது எனவும். மாங்கனியினுடையபெருமை இது எனவும் விளக்குவது.]

### ஆம்பிரவிருக்ஷப் பிரபாவம்.

சைவ முனிவர்களால் சூழப்பட்டபுண்ணியகரமான அனேக விருக்ஷங்கள் நெருங்கிய ஆரண்யத்தில் உருத்திரகோடிசாலையில் பாண்டவ தீர்த்தத்திற்கு 64 அம்சம் உத்தரத்தில் வேதம் மா விருக்ஷரூபமாய் வளர்ந்தோங்கி நிற்கின்றது. அது சிவபீஜத்தினின்றும் தோன்றியதாயும், ஸ்ரீ காமாக்ஷிதேவியினால் ஏகாம்பர தரு என்கிற திவ்யநாமத்தால் துதிக்கப்பட்டதாயும், வேத சா

கைகளேகிளைகளாகவுள்ள புண்ணிய ஸ்வரூமாயும், பதினுன்குஸித்தைகளே மல்லிகைக் கொடிகளாகப் படர்ந்திருப்பதாயும், ஜலப்பிரளயத்தில் மிதந்துவந்த மார்க்கண்டேய முனிவரைக் காத்ததாயும், புராணுதிகளால் புகழ்ந்துரைக்கப்பட்ட சிறப்புடையதாயும் விளங்குவது.

மார்க்கண்டேயமுனிவரைக் காத்த வரலாறு.

ஒருக்கால் கைலாசத்தில் அதிவிசித்திரமாய் அலங்கரித்திருந்த அந்தப்புரத்தில் போகமூர்த்தியாய் உமாதேவியாரோடு அர்த்தாசனத்தில் வீற்றிருக்கும்பொழுது சிவபெருமானுக்கு மிகவும் பிரிய ரூபிணிகளாய் 64 கலேகளினின்றும் தோன்றிய சக்திகோடிகள் அகங்காரம் கொண்டவர்களாய்ச் சிவபெருமானுரைச் சமீபித்து, “ எங்கள் நாயகரே, நீர் பார்வதிக்கு அர்த்தாசனம் கொடுத்திருப்பது போல எங்கட்கும் கொடுக்கவேண்டும் ” என்று பிரார்த்தித்தார்கள்.

சிவபெருமான் அவர்களேப் பார்த்து “ இவ்விடத்திலுள்ள புருஷரெல்லாம் என்னுடைய அம்சத்தில் தோன்றினவரே. ஸ்திரீகளெல்லாம் கௌரியம்சத்தில் தோன்றினவரே. ஆகையால்' புருஷர்களுக்கு யான் தலேவன், பெண்களுக்கு கௌரி தலேவி. இம்முறையால் கௌரியை நோக்க நீங்களெல்லாரும் தாழ்ந்தவர்கள்; தாழ்ந்தவர்களாகிய உங்களுக்குயான் சமாசனம் கொடுக்கத்தக்கதன்று என்னேடு சமமாகச் சமாசனத்தில் இருக்கத் தக்கவள் பார்வதிதேவியே ” என்றனர். அவ்வார்த்தையைக்கேட்ட சக்திகோடிகள் சிவபெருமானேப் பார்த்து “ என்ன கூறுனீர்? இது பக்ஷபாதமல்லவா? உம்மைப்போலும் இவ்வளவு முழுமோசமாகப் பேசினவரை யாங்கள் எங்கும் கண்டதில்லே. ஆ! ஆ!! யாங்களா கௌரியின் அம்சத்திற்றேன்றினவர்கள்? இந்தக் கௌரியல்லவா எங்கள் அம்சத்தில் தோன்றினவள்! இதனே அறியாதவர் போன்று எங்களுக்குச் சமமான ஆசனம் கொடுக்கமாட்டேன் என்றது அடாது. எங்கட்கே கொடுக்க வேண்டும். அன்றியும் இப்பார்வதிக்குப் பெண்களுக்கிருக்க வேண்டிய சாகசகுணம் முதலியன இருக்கின்றனவா? மன்மதனுடைய லீலேயில் சிறந்தவளா? நாயகன் குறிப்பு முதலியவற்றை அறியும் நுண்ணறிவுடையவளா? கல்வியிற் மிகுந்தவளா?

உருவம் முதலாக எண்ணப்பட்ட ஆறுகுணங்களால் நிறைந்த வளா? அந்தோ! ஒன்றும் இல்லையே. இருக்குமாயின் எங்கட்கு அந்த மான்மியத்தைத் தெரிவியும் என்று கூறிய வாய்மொழிகளைக் கேட்டு, அவர்கள் அகங்காரம் அடங்குமாறு ஒரு விளையாட்டாக அவர்கள் அணிந்திருந்த வஸ்திரங்கள் நழுகிப்போகும்படி செய்தனர். உடனே அச்சக்திகளெல்லாம் நிர்வாணிகளாய்ப் போகவே நாணமுற்றுப் பூமியில்தண்டாகாரமாகப் பணிந்தார்கள் அதனைப் பார்வதியார் கண்டு அச்சக்திகோடிகள் எழுந்திருந்து கழன்றுபோன்ற ஆடைகளை எடுத்து உடுக்குமளவும் தமது நாயகருக்கு அந்நிர்வாணகோலம் தோன்றாதிருக்க அவருடைய நேத்திரங்களை ஒரு முகூர்த்தகாலம் மூடியிருந்தனர். அப்பொழுது சூரிய சந்திராக்னிகளுடைய பிரகாசம்போய் எங்கும் இருள் மயமாய் எல்லாவுயிர்களும் செயலற்று இருளுருவாகவேயிருந்தன. அக்காலத்தில் ஜலப்பிரளயமும் உண்டாயிற்று. அந்தக் கோரமாகிய வெள்ளத்தில் அழிவில்லாதவராகிய மார்க்கண்டேய முனிவர் எல்லாவுயிர்களும் முழுகுவதைப் பார்த்து அதிசயித்தார் 'இனி யாம் என்ன செய்யக் கூடுவோம்'? என்று அந்தப் பிரளயத்தில் நீந்தி வருகின்றபொழுது, 'ஒருபற்றுமில்லாது இவ்வெள்ளத்தில்நீந்தி வருகின்ற நமக்குஓர்ஆதாரம் வேண்டும்' என்று இச்சைக் கொண்டார். சதாசிவ ஈசானருத்திர ஹரிப்பிரும்மாதி காரணரும், தேவியினுடைய திவ்ய திருமேனியில் ஆசையுள்ளவரும், நாசாகிதரும், மஹாதிரிபுரசுந்தரிக்கு நாயகரும், நிர்க்குணருமான காமேச்வரரைத் தியானம் செய்தார். "ஓ காமேசனே, எனக்கு ஆதாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று" பிரார்த்தித்துச்சிரமத்துடன் வரும்பொழுது, உருத்திரசாலையில் சித்ரூபராயும், யாவராலும் காணக்கூடாத தேஜோரூபராயும், இருக்கின்ற ஏகாம்பரநாதரானவர் கருணையுடையவராய் அவரை ரக்ஷிக்கும்பொருட்டுத் தம்முடைய ஸ்வரூபமாகவும், நான்கு வேதங்களையே நான்குகிளைகளாகவும், உடைய மா விருக்ஷத்தை ஒரு க்ஷணத்துக்குள் தளிர், பூ,கனி, இவைகளோடு பிரளய ஜலத்துக்குமேல் வளர்ந்தோங்கச் செய்தனர்.

அதுகண்டமுனிவர் 'இது நம் பெருமான் கருணையேயாம்' என்று அம் மா மரத்தின் மேலேறிப் பிரளய ஜலத்தைப் பார்த்து